Prepp

Practice, Learn and Achieve Your Goal with Prepp

# TNPSC VAO

## Year 2014 Paper (Part 1)

Simplifying **Government Exams**


SSC CHSL | IAS EXAM | RRB NTPC | NTSE | CDS
SSC CGL | CBSE UGC NET | IBPS PO | NDA
SBI PO | IBPS CLERK | AFCAT | SSC JE | CTET
CSIR UGC NET | CAPF | IBPS RRB

www.prepp.in

Sl. No. : 21055665

# GT714

பதிவு எண் | | | | | | | | |

2014

# பொதுத் தமிழும் பொது அறிவும்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் வினாத்தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின் அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும். விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் உங்களுடைய பதிவு எண், பெயர், வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) மற்றும் கேட்டுள்ள விபரங்களை நீலம் அல்லது கருமை நிற பந்துமுனைப் பேனாவினால் நீங்கள் எழுத வேண்டும். தவறினால் உங்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் உங்கள் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு விடை வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடை வட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ

9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
12. 81 முதல் 200 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
13. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

ENGLISH VERSION OF INSTRUCTIONS IS PROVIDED ON THE BACK COVER OF THIS BOOKLET

χ

[Turn over

SEAL

Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

1. சரியாகப் பொருத்துக :

| | நூலாசிரியர் | | நூல் |
|---|---|---|---|
| (a) | சுரதா | 1. | கொடிமுல்லை |
| (b) | முடியரசன் | 2. | பள்ளிப் பறவைகள் |
| (c) | வாணிதாசன் | 3. | எச்சில் இரவு |
| (d) | ஆலந்தூர் மோகனரங்கன் | 4. | பூங்கொடி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

2. கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்கான இலக்கணக் குறிப்புகளில் வரிசை மாறாத சரியான இணையைத் தேர்வு செய்.

மடக்கொடி – அவ்வூர்

(A) அன்மொழித் தொகை, சேய்மைச் சுட்டு

(B) பண்புத் தொகை, சேய்மைச் சுட்டு

(C) உரிச்சொற்றொடர், அன்மொழித் தொகை

(D) வினைத் தொகை, பண்புத் தொகை

3. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும் – இதில் பயின்று வரும் மோனைச் சொற்கள்

(A) ஒழுக்கம் – ஒழுக்கம்

(B) ஒழுக்கம் – விழுப்பம்

(C) விழுப்பம் – தரலான்

(D) உயிரினும் – ஓம்பப்



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

4. உடம்பார் அழியின் உயிரார் அழிவர் – இச்செய்யுளில் பயின்று வரும் மோனை

(A) கூழை மோனை

(B) இணை மோனை

(C) முற்று மோனை

(D) பொழிப்பு மோனை

5. மா முன் நிரையும் விள முன் நேரும் வருவது

(A) வஞ்சித் தளை

(B) இயற்சீர் வெண்டளை

(C) வெண்சீர் வெண்டளை

(D) கலித்தளை

6. பூவோடு சேர்ந்த நார் போல – உவமை உணர்த்தும் பொருள்

(A) நன்மை

(B) களிப்பு

(C) உயர்வு

(D) வீணாதல்

7. நூலையும் நூலாசிரியரையும் பொருத்துக.

(a) தி. ஜானகிராமன் — 1. சாயாவனம்

(b) க.நா. சுப்பிரமணியன் — 2. செம்பருத்தி

(c) சா. கந்தசாமி — 3. கரைந்த நிழல்கள்

(d) அசோகமித்திரன் — 4. பெரியமனிதன்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

8. ‘கற்பனைக் களஞ்சியம்’ – என்று போற்றப்படுபவர்

(A) தண்டபாணி தேசிகர்

(B) அமிர்தகவிராயர்

(C) சவ்வாதுப் புலவர்

(D) சிவப்பிரகாச சுவாமிகள்

9. சேரமான் பெருமாள் நாயனார் பாடாத நூல் எது?

(A) பொன் வண்ணத்தந்தாதி

(B) திருவாரூர் மும்மணிக் கோவை

(C) போற்றிக் கலிவெண்பா

(D) ஞான உலா

10. பின்வருவனவற்றுள் எது சமண இலக்கியம் இல்லை?

(A) சீவக சிந்தாமணி

(B) சூளாமணி

(C) குண்டலகேசி

(D) நீலகேசி

11. பின்வரும் பட்டியலில் வீ.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் எழுதிய நூல் எது?

(A) தமிழ் நாவலர் சரிதை

(B) புலவர் புராணம்

(C) தமிழ்ப் புலவர் சரித்திரம்

(D) பாவலர் சரித்திரத் தீபகம்



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

12. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி :

கூற்று A : 96 – வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று கலம்பகம்.

விளக்கம் R : பலவகைப் பாக்களையும் கலந்துபாடுவது கலம்பகம். அகமும் புறமும் கலந்து பாடப்படுவது கலம்பகம்.

(A) A சரி ஆனால் R தவறு
(B) A தவறு ஆனால் R சரி
(C) A மற்றும் R இரண்டும் சரி
(D) A மற்றும் R இரண்டும் தவறு

13. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய

வாயினர் ஆதல் அரிது

– இக்குறட்பாவில் 'நுணங்கிய' – என்னும் பொருளுணர்த்தும் ஆங்கிலச் சொல்

(A) SILENCER
(B) INTELLIGENT
(C) SIGNOR
(D) SILVER – TONGUED

14. "மனைக்கு விளக்கம் மடவாள் மடவாள்

தனக்குத் தகைசால் புதல்வர் ......"

– இப்பாடல் ஆசிரியரைக் கண்டறிந்து எழுதுக.

(A) விளம்பி நாகனார்
(B) சமண முனிவர்
(C) முன்றுறை அரையனார்
(D) நல்லாதனார்

15. பின்வருவனவற்றுள் 'ஈறுபோதல்' 'முன் நின்ற மெய் திரிதல்' என்னும் விதிகளின் படி புணர்ந்தது

(A) கருங்கல்
(B) பெருங்குன்று
(C) சிற்றூர்
(D) செங்கதிரோன்

16. பின்வருவனவற்றுள் பொருந்தாத பொருள் எது?

(A) புரம் – சிறந்த ஊர்
(B) பாக்கம் – கடற்கரைச் சிற்றூர்
(C) குப்பம் – குறிஞ்சி நில வாழ்விடம்
(D) பட்டினம் – கடற்கரை நகரம்



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

17. அற நூல்களிலிருந்து ஆய்ந்தெடுத்துத் "தமிழ்ச் செய்யுட் கலம்பகம்" – என்னும் நூலாகத் தொகுத்து விளக்கம் அளித்தவர்

(A) H.A. கிருஷ்ணப் பிள்ளை

(B) வீரமாமுனிவர்

(C) ஜீ.யு. போப்

(D) கால்டுவெல்

18. சமூகத்தின் மாற்றத்திற்குச் சிந்தனை விதைகளைத் தூவுகின்ற புரட்சியாளர்களாலேயே இந்த வையகம் வாழ்கிறது – எனக் கூறியவர்

(A) அம்பேத்கர்

(B) காந்தியடிகள்

(C) ஈ.வே. இராமசாமி

(D) அண்ணாதுரை

19. பின்வருபவருள் யார் சைவ அடியாரில்லை?

(A) வாகீசர்

(B) ஆளுடைய பிள்ளை

(C) தம்பிரான் தோழர்

(D) பெரியவாச்சான் பிள்ளை

20. நூலாசிரியரோடு நூலைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சுத்தானந்த பாரதி | 1. | ஞானரதம் |
| (b) | வ.வே.சு ஐயர் | 2. | ஏழைபடும் பாடு |
| (c) | சுப்பிரமணிய பாரதி | 3. | விநோதரஸ மஞ்சரி |
| (d) | வீராசாமி செட்டியார் | 4. | கமலவிஜயம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 2 | 4 | 1 | 3 |



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

21. பொருளறிந்து பொருத்துக.

| | I | | II |
|---|---|---|---|
| (a) | பிடர்தலை ஏறியவர் | 1. | துர்க்கை |
| (b) | எழுவருள் இளையவர் | 2. | பத்ரகாளி |
| (c) | இறைவனை நடமாடச் செய்தவர் | 3. | பிடாரி |
| (d) | தாருகன் மார்பைப் பிளந்தவர் | 4. | கொற்றவை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

22. ''மதியிலி அரசர் நின் மலரடி பணிகிலர்

வானகம் ஆள்வாரே''

– இப்பாடலுக்குரிய அரசன் ——————

(A) இராஜராஜசோழன்

(B) நந்திவர்மன்

(C) நரசிம்மவர்மன்

(D) சுந்தர பாண்டியன்

23. தாமரையிலைத் தண்ணீர் போல – உவமை உணர்த்தும் பொருள்

(A) மகிழ்ச்சி

(B) நட்பு

(C) பற்றின்மை

(D) தவிப்பு

24. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல் :

வேடன் சிங்கத்தை வீழ்த்தினான்

(A) தனிவாக்கியம்

(B) தொடர் வாக்கியம்

(C) எதிர்மறை வாக்கியம்

(D) கலவை வாக்கியம்

25. விடைக் கேற்ற வினாவைத் தேர்க :

கபிலர் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்.

(A) இலக்கணமாகத் திகழ்ந்தவர் யார்?

(B) நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் யார்?

(C) நட்புக்குச் சிறந்த புலவர் யார்?

(D) நட்பு என்பது யாது?



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

26. பின்வருவனவற்றுள் 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்னும் விதியின் படி புணராதது

(A) தன்னுயிர்
(B) பெண்ணரசு
(C) பைந்தமிழ்
(D) என்னருமை

27. சாதுவன் வாணிகம் செய்யும் பொருட்டுக் கடல் கடந்து சென்ற குறிப்பு – இடம் பெற்ற நூல் எது?

(A) சீவகசிந்தாமணி
(B) சிலப்பதிகாரம்
(C) குண்டலகேசி
(D) மணிமேகலை

28. பொருத்துக

| | இயற்பெயர் | | சிறப்புப் பெயர் |
|---|---|---|---|
| (a) | திரு.வி.கலியாண சுந்தரம் | 1. | தமிழ்த் தாத்தா |
| (b) | மறைமலையடிகள் | 2. | தமிழ்த் தென்றல் |
| (c) | இரா.பி.சேதுப்பிள்ளை | 3. | தனித்தமிழ் வித்தகர் |
| (d) | உ.வே.சாமிநாத ஐயர் | 4. | சொல்லின் செல்வர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

29. நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்
– என்னும் குறள் கூறும் கருத்தின் அடிப்படையில் பின்வருவனவற்றில் எதைக் குறிக்கும்?

(A) மருத்துவ அறிவு
(B) அணுவியல் அறிவு
(C) மண்ணியல் அறிவு
(D) நீரியல் அறிவு

30. பொருந்தாததைச் சுட்டுக

(A) வாதம்
(B) ஏமம்
(C) பித்தம்
(D) சீதம்



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

31. ''களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக்கடனே'' என்ற அடி இடம் பெற்ற நூல்

(A) பதிற்றுப்பத்து

(B) பரிபாடல்

(C) பட்டினப்பாலை

(D) புறநானூறு

32. 'குறுந்தொகை' என்ற நூலைத் தொகுத்தவர்

(A) கூடலூர்க்கிழார்

(B) உருத்திர சன்மர்

(C) பூரிக்கோ

(D) பெருந்தேவனார்

33. "செல்வத்துப் பயனே ஈதல்" எனப் பாடியவர்

(A) திருவள்ளுவர்

(B) நக்கீரனார்

(C) கபிலர்

(D) ஔவையார்

34. பொருந்தா இணையைத் தேர்க

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| (A) | கா | – | சோலை |
| (B) | க | – | சாலை |
| (C) | மா | – | விலங்கு |
| (D) | மீ | – | உயர்ச்சி |

35. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக

இளமையில் கல்

(A) பிறவினை வாக்கியம்

(B) கலவை வாக்கியம்

(C) கட்டளை வாக்கியம்

(D) வினா வாக்கியம்



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

36. பின்வரும் இலக்கணக் குறிப்புக்குரிய பொருந்தாச் சொல்லைத் தேர்க

உவமைத் தொகை

(A) தமிழன்னை

(B) மதிமுகம்

(C) மலர்ப்பாதம்

(D) கல்திரள்தோள்

37. பின்வருவனவற்றுள் எது அண்ணாவின் படைப்பு அன்று?

(A) வேலைக்காரி

(B) ஓர் இரவு

(C) குறட்டை ஒலி

(D) செவ்வாழை

38. 'கற்கின்றனர்' என்னும் நிகழ்கால வினைமுற்றின் வேர்ச்சொல்

(A) கற்க

(B) கல்வி

(C) கற்று

(D) கல்

39. பின்வருவனவற்றுள் எவை இணையில்லை?

(A) முதல் கலம்பகம் – நந்திக் கலம்பகம்

(B) முதல் பரணி – தக்கயாக பரணி

(C) முதல் நாவல் – பிரதாப முதலியார் சரித்திரம்

(D) முதல் உலா – திருக்கையிலாய ஞான உலா



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

40. மனிதனின் மனநிலையை இருள், மருள், தெருள், அருள் – எனக் கூறியவர்

(A) இராமலிங்க அடிகள்

(B) இரா.பி. சேதுப்பிள்ளை

(C) நாமக்கல் – இராமலிங்கம் பிள்ளை

(D) முத்துராமலிங்கத் தேவர்

41. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முன்தோன்றிய மூத்த குடி"
– என தமிழினத்தின் தொன்மையைப் பற்றிக் கூறும் நூலின் பெயர்

(A) புறநானூறு

(B) புறப்பொருள் வெண்பா மாலை

(C) பதிற்றுப்பத்து

(D) தொல்காப்பியம்

42. பொருந்தாத பெயரைச் சுட்டுக

(A) பிங்கலம்

(B) திவாகரம்

(C) சூளாமணி

(D) சூடாமணி

43. பொருந்தாத இணையைச் சுட்டுக.

(A) கூறை – அறுவை

(B) துகில் – அகில்

(C) கலிங்கம் – காழகம்

(D) சீலை – புடைவை



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

44. ''குளம் நிறைந்த நீர்த்தடம்போல் குளிர் தூங்கும் பரப்பினதாய்

வனம் மருவும் நிழல்தரு தண்ணீர் பந்தர் வந்தணைந்தார்''

''இப்பாடலுக்குரிய கதாநாயகன்''

(A) திருநாவுக்கரசர்

(B) ஞானசம்பந்தர்

(C) சுந்தரர்

(D) மணிவாசகர்

45. ஒலி வேறுபாடறிந்து சரியானப் பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

மணம்–மனம் என்ற சொல்லின் பொருள் யாது?

(A) உள்ளம் – வாசனை

(B) எண்ணம் – இதயம்

(C) வாசனை – உள்ளம்

(D) மணத்தல் – மானம்

46. கீழ்க்காணும் ஒற்றளபடைச் சொற்களுள் மாறுபட்டு நிற்பதை கண்டறிந்து எழுதுக.

(A) வாழ்ழ்க்கை

(B) சங்ங்கு

(C) நெஞ்ஞ்சு

(D) கண்ண்

47. பயணம் என்ற சொல்லிற்கு செலவு என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர்

(A) மறைமலை அடிகள்

(B) பரிதிமாற்கலைஞர்

(C) திரு.வி. கலியாணசுந்தரனார்

(D) பண்டிதமணி கதிரேசன் செட்டியார்



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

48. அரியவற்றுள் எல்லாம் அரிதோ – பெரியாரைப்

இவ்வடியில் பயின்றுவரும் எதுகை.

(A) இணை எதுகை

(B) பொழிப்பு எதுகை

(C) கீழ்க்கதுவாய் எதுகை

(D) மேற்கதுவாய் எதுகை

49. அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்

ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்

இதில் பயின்று வரும் இயைபுச் சொற்கள்

(A) அப்பா – ஆருயிர்

(B) அப்பா – அன்புசெயல்

(C) வேண்டுதல் – வேண்டும்

(D) வேண்டும் – வேண்டும்

50. ஈற்றடியின் ஈற்றுச் சீரானது ஓரசை வாய்ப்பாடுகளுள் ஒன்று கொண்டு முடியும் பா வகை

(A) வஞ்சிப்பா

(B) கலிப்பா

(C) வெண்பா

(D) ஆசிரியப்பா



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

51. ''உண்மைநெறி விளக்கம்'' – என்ற நூலை எழுதியவர்

(A) அருணந்தி சிவாசாரியார்

(B) மறைஞான சம்பந்தர்

(C) உமாபதி சிவாசாரியார்

(D) மெய்கண்ட தேவர்

52. முதன்முதலில் தமிழ்ப் புத்தகங்களை அச்சிட்டு வெளியிட்டவர்

(A) எல்லீஸ் துரை

(B) சீகன்பால்க் ஐயர்

(C) இரேனியுஸ் ஐயர்

(D) ஜி.யூ. போப்

53. ஆறுமுக நாவலருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கியவர்

(A) மீனாட்சி சுந்தரம்பிள்ளை

(B) சுப்பிரமணிய தேசிகர்

(C) ராமலிங்க அடிகள்

(D) கோபால கிருஷ்ண பாரதியார்



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

54. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி :

கூற்று A : குற்றியலுகரம் சார்பெழுத்துகளுள் ஒன்று. ஈற்றயலெழுத்தை நோக்க ஆறு வகைப்படும்.

விளக்கம் R : ஒரு சொல்லின் ஈற்றில் 'உகர' உயிர்மெய் எழுத்து வரின் குற்றியலுகரம் எனப்படும்.

(A) A மற்றும் R இரண்டும் சரி. மேலும் A க்கு R சரியான விளக்கமாகும்.

(B) A சரி R தவறு. மேலும் A க்கு R சரியான விளக்கமன்று

(C) A தவறு R சரி. மேலும் R விளக்கத்திற்கு A சரியானத் தொடர் அன்று

(D) A மற்றும் R இரண்டும் தவறு

55. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி :

கூற்று A : உயிரளபெடை வகைகளுள் ஒன்று இன்னிசையளபெடை. மூன்று மாத்திரையாக ஒலிக்கும்.

விளக்கம் R : செய்யுளில் ஓசை குறையாத போதும் இனிய இசைக்காக அளபெடுப்பது இன்னிசையளபெடை.

(A) A மற்றும் R இரண்டும் சரி. மேலும் A க்கு R சரியான விளக்கமாகும்

(B) A மற்றும் R இரண்டும் தவறு

(C) A சரி R தவறு. மேலும் A க்கு R சரியான விளக்கமன்று

(D) A தவறு R சரி. R விளக்கத்திற்கு பொருத்தமான தொடராக A அமையவில்லை

56. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி :

கூற்று A : கருப்பொருள்களுள் ஒன்று 'பறை' ஆகும்.

விளக்கம் R: குறிஞ்சி நிலத்தின் கருப்பொருள்களுள் ஒன்றாக 'தொண்டகப்பறையையும்' முல்லை நிலத்தின் கருப்பொருள்களுள் ஒன்றாக 'மணமுழாபறையையும் குறிப்பிடுகிறது' அகப்பொருள்.

(A) கூற்று A தவறு. விளக்கம் R சரி

(B) கூற்று A சரி. விளக்கம் R தவறு

(C) விளக்கம் R தவறு. கூற்று A தவறு

(D) விளக்கம் R சரி. கூற்று A சரி



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

57. பொருத்துக :

| | ஆசிரியர் | | சிறுகதை |
|---|---|---|---|
| (a) | மு. வரதராசனார் | 1. | மெல்ல மெல்ல மற |
| (b) | ஸ்ரீமதி எஸ். இலட்சுமி | 2. | நன்றிப் பரிசு |
| (c) | நீலவன் | 3. | மணம் நுகர்ந்ததற்குப் பணம் |
| (d) | இலட்சுமி | 4. | குறட்டை ஒலி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

58. "மக்களும் தேவரும் பிரமரும் நரகரும்

தொக்க விலங்கும் பேயும் என்றே"

இச்செய்யுளடிகள் இடம் பெற்ற நூல்

(A) சிலப்பதிகாரம்

(B) குண்டலகேசி

(C) மணிமேகலை

(D) வளையாபதி

59. பொருந்தும் இலக்கணம் யாது?

(A) கூவா – விளி

(B) தேவா – தானியாகு பெயர்

(C) இருந்தவள்ளல் – ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

(D) நீர்முகில் – 2–ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

60. பின்வரும் இலக்கணங்களுள் தவறானது எது?

(A) இகழ்வார் – வினையாலணையும் பெயர்

(B) செந்நீர் – வினைத் தொகை

(C) இன்னாச்சொல் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

(D) உண்ணாது – வினையெச்சம்



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

61. "கூவா முன்னம் இளையோன் குறுகி நீ

ஆவான் யார் என அன்பின் இறைஞ்சினான்" –

இச்செய்யுளடிகளில் 'இறைஞ்சினான்' – யார்?

(A) சுக்ரீவன் (B) குகன்

(C) இலக்குவன் (D) அனுமன்

62. சொல்லுக்கேற்ற பொருளை பொருத்துக :

(a) அம்பி 1. குஞ்சி

(b) அல் 2. பறை

(c) துடி 3. இருள்

(d) தலைமுடி 4. படகு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

63. நூலையும் நூலாசிரியரையும் பொருத்துக :

(a) விந்தன் 1. குருதிப்புனல்

(b) சு. சமுத்திரம் 2. பெற்றமனம்

(c) இந்திரா பார்த்தசாரதி 3. சோற்றுப்பட்டாளம்

(d) மு.வ. 4. பாலும் பாவையும்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 2 | 4 | 3 | 1 |



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

64. சரியானவற்றைத் தேர்க :

| | உரிப்பொருள் | | திணை |
|---|---|---|---|
| (1) | ஊடலும் ஊடல் நிமித்தமும் | – | மருதம் |
| (2) | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் | – | முல்லை |
| (3) | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் | – | நெய்தல் |
| (4) | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் | – | பாலை |

(A) 1 – ம் 2 – ம் சரி

(B) 2 – ம் 3 – ம் சரி

(C) 1 – ம் 3 – ம் சரி

(D) 3 – ம் 4 – ம் சரி

65. சரியானவற்றைத் தேர்க :

| | தெய்வம் | | திணை |
|---|---|---|---|
| (1) | முருகன் | – | குறிஞ்சி |
| (2) | இந்திரன் | – | மருதம் |
| (3) | துர்க்கை | – | நெய்தல் |
| (4) | திருமால் | – | பாலை |

(A) 2 – ம் 3 – ம் சரி

(B) 1 – ம் 2 – ம் சரி

(C) 2 – ம் 4 – ம் சரி

(D) 1 – ம் 4 – ம் சரி

66. இலக்கணக் குறிப்புச் சொல்லை எழுதுக.
இன்னிசை அளபெடை

(A) சாஅய்

(B) குறீஇ

(C) படூஉம்

(D) தாங்குறூஉம்

67. பின்வரும் இணைகளில் பொருந்தாத இணையைத் தெரிந்தெடுத்து எழுதுக.

(A) சூரிய காந்தி – நா.காமராசன்

(B) ஞானரதம் – பாரதியார்

(C) எழுத்து – சி.சு.செல்லப்பா

(D) குயில்பாட்டு – பாரதிதாசன்

prepp



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

68. பின்வருவனவற்றுள் எது பொருந்தாதது?

(A) நாககுமார காவியம்

(B) உதயண குமார காவியம்

(C) குண்டலகேசி

(D) நீலகேசி

69. ஈற்றயலடி முச்சீராக; ஏனைய அடிகள் நாற்சீராக – அமையும் பா வகை – பின்வருவனவற்றுள் எது?

(A) நேரிசை ஆசிரியப்பா

(B) நிலை மண்டில ஆசிரியப்பா

(C) அடிமறி மண்டில ஆசிரியப்பா

(D) இணை குறளாசிரியப்பா

70. பொருளறிந்து பொருத்துக

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| (a) | கலாபம் | 1. | கிளி |
| (b) | விவேகன் | 2. | பொய்கை |
| (c) | வாவி | 3. | ஞானி |
| (d) | அஞ்சுகம் | 4. | தோகை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

71. திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும்
மங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்

– எனத் தமிழின் பழஞ் சிறப்பினைப் பெருமிதம் பொங்கப்பாடிய கவிஞர்

(A) பாரதியார்

(B) கண்ணதாசன்

(C) சுரதா

(D) பாரதிதாசன்



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

72. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.

நேற்று எங்கள் பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற்றது.

(A) வினா வாக்கியம்

(B) செய்தி வாக்கியம்

(C) பிறவினை வாக்கியம்

(D) உணர்ச்சி வாக்கியம்

73. ஒலி வேறுபாடறிந்து சரியானப் பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அறை – அரை என்ற சொல்லின் பொருள் யாது?

(A) கட்டடப்பகுதி–ஒன்றில் பாதி

(B) காலியானப்பகுதி – கட்டடப்பகுதி

(C) ஒரு பொருளின் பாதி – ஓர் அறையின் பகுதி

(D) ஒன்றில் பாதி – கட்டடப்பகுதி

74. பொருந்தாத இணையைக் கண்டறிக.

| | ஆசிரியர் | | இயற்றிய நூல் |
|---|---|---|---|
| (A) | வீரமாமுனிவர் | – | பரமார்த்தகுரு கதை |
| (B) | தேவநேயப்பாவாணர் | – | தமிழர் திருமணம் |
| (C) | திரு.வி.க. | – | சைவத் திறவு |
| (D) | பெருஞ்சித்திரனார் | – | தமிழ்ச் சோலை |

75. அகர வரிசைப்படி தேர்ந்தெடுத்து எழுதுக.

(A) பிட்டு, பூட்டு, பொன், பெண், பாட்டு

(B) பூட்டு, பாட்டு, பிட்டு, பெண், பொன்

(C) பாட்டு, பிட்டு, பூட்டு, பெண், பொன்

(D) பொன், பெண், பாட்டு, பிட்டு, பூட்டு



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

76. நூலையும் நூலாசிரியரையும் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வேதநாயகம் பிள்ளை | 1. | மானவிஜயம் |
| (b) | சூரிய நாராயண சாஸ்திரி | 2. | அகலிகை வெண்பா |
| (c) | வெ.ப. சுப்பிரமணிய முதலியார் | 3. | பாரிகாதை |
| (d) | ரா. ராகவையங்கார் | 4. | நீதி நூல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

77. பின்வருவனவற்றுள் நா. பார்த்தசாரதி எழுதிய நூலைச் சுட்டுக

(A) கல்லுக்குள் ஈரம்

(B) சமுதாய வீதி

(C) யாகசாலை

(D) முள்ளும் மலரும்

78. பின்வரும் தொகுப்பில் பொருந்தாத சொல்லினை எடுத்தெழுதுக

(A) செம்மை

(B) பசுமை

(C) கருமை

(D) வெம்மை

79. அகர வரிசைப்படி தேர்ந்தெடுத்து எழுதுக

(A) மெல்ல, மீன், மையல், மண், முடி

(B) மண், மீன், முடி, மெல்ல, மையல்

(C) முடி, மீன், மெல்ல, மையல், மண்

(D) மண், முடி, மையல், மெல்ல, மீன்

80. 'உதவு' – என்ற சொல்லின் சரியான பொருள் உணர்த்தும் சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(A) உழைப்பின்றி உயர்வில்லை

(B) உயர்ந்தோரை உலகு மதிக்கும்

(C) உயர்வே மதிப்பைத் தரும்

(D) உயர்ந்தோர் உதவும் உள்ளம் கொண்டவர்



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

prepp

# Latest Sarkari jobs, Govt Exam alerts, Results and Vacancies

- Latest News and Notification
- Exam Paper Analysis
- Topic-wise weightage
- Previous Year Papers with Answer Key
- Preparation Strategy & Subject-wise Books

To know more **Click Here**

www.prepp.in